**GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)**

(Re-Accredited with 'A' Grade by NAAC and Affiliated to Bharathidasan University, Tiruchirapalli)

**KARUR – 639 005.**


**Date: 18-12-2020**

# சுற்றறிக்கை

01. அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி) கரூர் - நவம்பர் 2020 ஒற்றை பருவ எழுத்துத் தேர்வுகள் Online (இணையவழி) மூலம் 21-12-2020 முதல் 08-01-2021 வரை நடைபெற உள்ளது.

02. ஆன்லைன் எழுத்துத் தேர்வுகள் 75 மதிப்பெண்களுக்கு கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.
மதிப்பெண்கள் : பகுதி - அ (10X2=20)
பகுதி - ஆ (5X5=25)
பகுதி - இ (3X10=30)

தேர்வு நேரம் :03 மணிநேரம்.

காலை 09.30 AM to 12.30 PM
மாலை 02.00 PM to 05.00 PM

03. துறைத்தலைவர்கள் ஆன்லைன் எழுத்துத் தேர்வு நடத்துவதற்கு ஏதுவாக தேர்வு கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். துறைத்தலைவரை உள்ளடக்கிய தேர்வு கண்காணிப்புக் குழு ஆன்லைன் தேர்வு நடத்த தேவையான வாட்சப் (Whatsapp) குழுவை ஏற்படுத்துதல் மற்றும் மாணக்கர்களின் மின்அஞ்சல் முகவரியை சேகரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

04. துறைத்தலைவர்கள் தேர்வு நடைபெறும் ஒவ்வொருநாளும் அந்த பாடப்பிரிவிற்குறிய பொறுப்பாசிரியர் மூலமாக வருகைப்பதிவினை தயார் செய்து தேர்வுநெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

05. மாணக்கர்களுக்கு வினாத்தாள் தேர்வு துவங்கும் நேரத்திற்கு 10 நிமிடம் முன்பாக கிடைத்திடுமாறு துறைத்தலைவர்கள் பொறுப்பாசிரியர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

06. மாணாக்கர்கள் எழுத்துத் தேர்வினை A4 வெள்ளை நிறத் தாளில் எழுதுதல் வேண்டும். முதல் பக்கத்தின் மேற்புறத்தில் மாணாக்கருடைய பதிவு எண், தேர்வு தாளின் தலைப்பு, தேர்வு தாளின் பாடக் குறியீடு, தேர்வு நடைபெறும் நாள் மற்றும் மொத்தம் எழுதிய பக்கங்கள் ஆகியன இருத்தல் வேண்டும். விடைத்தாளின் இரண்டாவது பக்கத்திலிருந்து மாணாக்கருடைய பதிவு எண் மற்றும் கையொப்பம் இருக்குமாறு அறிவுறுத்துதல் வேண்டும். (பக்கத்தின் மேற்புற வலது மூலையில் மாணாக்கருடைய பதிவு எண், தாளின் கீழ்புற வலதுமூலையில் மாணாக்கரின் கையொப்பமும் இருக்குமாறு தெரிவித்தல் வேண்டும்).

07. மாணாக்கர்கள் தாங்கள் தேர்வு எழுதிய விடைத்தாள் புத்தகத்தினை அனைத்து தேர்வுகளும் முடிந்த பின் நூல் கொண்டு கட்டி உறையிலிட்டு துறைத்தலைவருக்கு கூரியர் மூலமாகவோ அல்லது விரைவுத் தபால் மூலமாகவோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ மூன்று நாட்களுக்குள் கிடைக்கும்படி அனுப்ப அறிவுறுத்துதல் வேண்டும்.

08. துறைத்தலைவர் தேர்வு கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து விடைத்தாள்களை மதிப்பீடு செய்து தங்கள் துறைக்கு வழங்கப்பட்ட OMR தாளில் பதிவிட்டு தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் ஜனவரி *18-ம்* தேதிக்குள் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09. நவம்பர் - 2020 ஒற்றைப்பருவ செய்முறைத்தேர்வுகள் 19-01-2021 முதல் 23-01-2021 வரை நடைபெறும்.

18/12/20

தேர்வு நெறியாளர்
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கரூர் - 639 005.

18/12/2020

முதல்வர்

முதல்வர்
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கரூர் - 639 005.